**OS**.**No**. 38/2017 **C/W OS No**.100/2017 **C/W OS**.**No**.98/2021

**DW** 1- சரஸ்வதி க/பெ. ராமசாமி

நாள். 03.10.2023

<u>பிரதிவாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. என்னுடைய கணவர் ராமசாமி முதலில் சர்வோதயர் சங்கத்தில் வேலை பார்த்தார் என்றால் கதர் கடையில் வேலை பார்த்தார். கதர் கடையில் 10–20 வருடம் வேலை பார்த்த பின்பு முத்துசாமி மற்றும் ராமசாமியுடன் சேர்ந்து சொந்தமாக பிளிச்சிங் பட்டரை வைத்தார் என்றால் ஆமாம். பின்னிட்டு கந்தசாமி உடன் சேர்ந்து அதை நடத்தினாரா என்றால் இல்லை. வாதி ரத்தினசாமியும் சேர்ந்து தான் மேற்படி சலவை பட்டரை நடத்தி வந்தார் என்றால் இல்லை. என்னுடைய கணவர் தான் நடத்தி வந்தார். என் கணவரும் வாதியும் சேர்ந்து தான் தொழில் நடத்தி வந்த வருமானத்தை வைத்து தான் தாவா சொத்தில் கிரயம் வாங்கினார் என்றால் இல்லை. என்னுடைய கணவர் தான் வாங்கினார். தாவா சொத்தில் ராஜேஷ்வரி என்ற பிளிச்சிங் சலவை பட்டரை நடந்தது என்றால் ஆமாம். துரைசாமி மற்றும் குனசேகரன் உடன் சேர்ந்து பிரின்ஸ் டையிங் நிறுவனம் ஆரமித்தார் என்றால் இல்லை.

2. மாசு கட்டுப்பாட்டு பிரச்சனை ஏற்பட்டதால் துரைசாமியும் குனசேகரனும் விலகிய பிறகு தனிப்பட்ட முறையில் பிரின்ஸ் டையிங் நடத்தினார் என்றால் இல்லை அவர்கள் சேரவே இல்லை. என் கணவர் பிரின்ஸ் டையிங் நடத்தியபோது தாவா சொத்தில் ஓட்டு வீடு இருந்தது என்றால் ஆமாம். வாதி ராஜேஷ்வரி என்ற பெயரில் 10000 சதுரடியில் பிளிச்சிங் சலவை பட்டரை நடத்தியபோது மேலும் 10000 சதுரடி போட்டு என்னுடைய கணவர் பிரின்ஸ் டையிங் நடத்தி வந்தார் என்றால் ஆமாம். மொத்தம் 20000 சதுரடியில் ஓட்டு கட்டிடம் இருந்தது என்றால் ஆமாம். அதை என் கணவர் தான் போட்டார். தற்போது இடிந்துவிட்டது. என்னுடைய கணவரால் பிரின்ஸ் டையிங் நடத்த முடியவில்லை என்பதால் வாதியையும் சேர்த்து நடத்தினார் என்றால் இல்லை. எனக்கு கோவிந்தராஜ் என்ற மகன் உள்ளார் என்றால் ஆமாம். அவர் திருமணம் செய்து தனித்யாக சென்றுவிட்டார் என்றால் ஆமாம். மகள்கள் இருவருக்கும் திருமணம் செய்து கொடுத்துவிட்டோம் என்றால் ஆமாம். அதனால்

மகன் ரத்தினசாமி தான் என் கணவருடன் இருந்து பிரின்ஸ் டையிங் நடத்தி வந்தார் என்றால் இல்லை.

3. வாதி அசல் வழக்கில் என்ன என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார் என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். தாவா சொத்தில் முதலில் சலவை பட்டரை தான் நடந்து வந்தது என்றால் ஆமாம். எவ்வளவு ஏக்கர் என்றால் ஒன்றரை ஏக்கர். என்னுடைய கணவர் இறந்த போது 85 வயது இருக்கும் என்றால் இல்லை 75. தற்போது எனக்கு என்ன வயதாகிறது என்றால் 75. எனது கணவருக்கு நானும் என் மக்கள் நான்கு பேரும் வாரிசுகள் என்றால் ஆமாம். என் கணவர் இறந்த பிறகு வாரிசுகளுக்கு பாகம் உள்ளது என்றால் இல்லை எனக்கு எழுதிவைத்துவிட்டார். அவ்வாறு எனக்கு எதுவும் எழுதிவைக்கவில்லை என்றால் சரியல்ல. இறப்பதற்கு ஆறு மாதம் முன்பே எழுதி வைத்துவிட்டார். என் கணவருக்கு சர்க்கரை நோய் ரத்த அழுத்தம் நரம்பு தளர்ச்சி இருந்தது என்றாலும் மேற்படி வியாதிகள் முற்றி ஒரு வருடம் படுத்த படுக்கையாக இருந்தார் என்றாலும் சரியல்ல. சுயநினைவு இல்லாமல் ஆள் அடையாமல் தெரியாமல் ஒரு வருடம் இருந்தார் என்றால் சரியல்ல. பத்திரம் எழுதிய விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. என்னிடம் சொல்லிவிட்டு தான் சென்றார். நல்லூர் சென்று பத்திரம் பதிவு ஆன போது உடன் இருந்து பார்த்தேனா என்றால் பார்த்தேன். யார் யார் சென்றோம் என்றால் நானும் என் மகள் சுமதியும் சென்றோம். என் கணவரும் உடன் வந்தார் என்றால் ஆமாம்.

4. என்னுடைய கணவருக்கு சுயநினைவு இல்லாமல் அவரை தூக்கி சென்றோமா என்றால் இல்லை. அப்போது யார் யார் உடன் வந்தார்கள் என்றால் என்னுடைய மருமகன் முத்து குமார் மற்றும் முத்து குமாருக்கு தெரிந்து இன்னொரு நபரும் வந்தார்கள். என்னுடைய கணவருக்கு சுயநினைவு இல்லாமல் இருந்தபோது இன்னொரு மகனாக கோவிந்தராஜ்க்கு தெரிந்தால் பிரச்சனை வரும் என்பதால் நானும் என்னுடைய மகள்களும் சேர்ந்து மோசடியான ஒரு ஆவணத்தை உருவாக்கியுள்ளோம் என்றால் சரியல்ல. என் கணவர் இறந்த பிறகு பிரின்ஸ் டையிங் நடத்தி வருகிறார் என்றால் இல்லை. மேற்படி மோசடியான செட்டில் மெண்ட் பத்திரத்தை வைத்து தற்போது என் மகளுடன் சேர்ந்து 7ம் பிரதிவாதி தயாநிதி பெயரில் மோசடியான பத்திரம் உருவாக்கியுள்ளோம் என்றால் சரியல்ல. என்னுடைய மற்ற வாரிசுகளுக்கு சொத்து கிடைக்கக்கூடாது என்பதற்காக என் மகளுடன் சேர்ந்து மோசடியாக பத்திரம்

உருவாக்கியுள்ளோம் என்றால் சரியல்ல. சொத்தின் பெயரில் ரூ44 லட்சம் கடன் இருந்தது என்றால் ஆமாம். வங்கியில் இருந்து வாரிசுகள் அனைவருக்கும் நோட்டீஸ் வந்தது என்றால் ஆமாம்.

5. மேற்படி ரூ44 லட்சத்தை நாங்கள் அனைவரும் சேர்ந்து தான் கட்டினோம் என்றால் இல்லை நான் தான் கட்டினேன். அவ்வாறு நான் கட்டியதாக சொல்வது பொய் என்றாலும் வாதி ரத்தினசாமி தான் கட்டினார் என்றாலும் அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. பிரின்ஸ் டையிங் நடத்துவதற்கு வாதி ரத்தினசாமி தான் TIIC ல் லோன் வாங்கி நடத்தினார் என்றால் இல்லை. மேற்படி TIIC லோனை பங்குதாரர் என்ற முறையில் வாதி ரத்தனசாமி தான் கட்டினார் என்றால் இல்லை நான் கொடுத்து தான் கட்டினார். எனக்கு தனிப்பட்ட முறையில் வருமானம் எதுவும் இல்லை என்றால் மகளிடம் வாங்கி கட்டினேன். பிரின்ஸ் டையிங் Factory ல் 2.5 லட்சம் தண்ணீரை சுத்தம் செய்ய அனுமதி உள்ளது என்றால் ஆமாம். மேற்படி அனுமதியின் வாதி ரத்தினசாமிக்கு பாதி பாத்தியம் என்றும் என் கணவர் ராமசாமிக்கு பாதி பாத்தியம் என்றாலும் சரியல்ல. சுத்திகரிப்பு நிலையத்திற்கு பணம் செலுத்தாமல் லட்ச கணக்கில் நிலுவையில் ஆகிவிட்டது என்றால் ஆமாம். அதை கட்ட சொல்லி எங்கள் வாரிசுகள் அனைவருக்கும் நோட்டீஸ் வந்தது என்றால் இல்லை.

6. நானும் என்னுடைய மகள் சுமதியும் சுத்திகரிப்பு நிலையத்திற்கு 5 ல் 1 பங்கு தான் செலுத்துவோம் என பதில் அனுப்பினோம் என்றால் இல்லை. சுத்திகரிப்பு நிலையத்திற்கு என்னுடைய கணவர் வர்த்தமான கடிதம் கொடுத்ததாக சொல்வதும் நான் வர்த்தமான கடிதம் கொடுத்ததாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் இருந்து நீதிமன்ற ஆணையர் வந்து தாவா சொத்தை பார்வையிட்டரா என்றால் இல்லை. ஆணையர் சொத்தை பார்வையிட்டு 20000 சதுரடியில் கட்டிடம் இருப்பதாக குறிப்பிட்டு அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் இல்லை. வாதி ரத்தினசாமி துணியை உலர்த்துவதற்காக தாவா சொத்தை பயன் படுத்தி வருகிறார் என்றால் சரியல்ல். நானும் என்னுடைய மகளும் பேரனும் சேர்ந்து தற்போது வாதியின் சுவாதீனத்தை இடஞ்சல் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. என்னுடைய கணவர் ராமசாமி கவுண்டர் என்னுடைய பெயருக்கு செட்டில் மெண்ட் எழுதிக்கொடுத்தது பொய் என்றால் சரியல்ல. எனக்கு தாவா சொத்தில் தனிப்பட்ட முறையில் எதுவும்

இல்லை என்றால் சரியல்ல. நான் என்னுடைய பேரன் தயாநிதி பெயரில் எழுதி வைத்த செட்டில் மெண்ட் பத்திரம் செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கும் வாதிக்கும் ராமசாமி கவுண்டரின் மற்ற வாரிசுகளுக்கும் தலா 5ல் 1 பங்கு பாத்தியம் உள்ளது என்றால் சரியல்ல. என்னுடைய மகள் சுமதி தற்போது என்னை பராமரித்து வருவதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ள படி 5ல் 1 பங்கு பாகம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றாலும் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள தண்ணீர் பெறும் உரிமையில் வாதிக்கு தனிப்பட்ட முறையில் 2ல் 1 பங்கும் என்னுடைய கணவருக்கு பாத்தியப்பட்ட 2ல் 1 பங்கில் 5ல் 1 பாகமும் கிடைக்த்தக்கது என்றாலும் சரியல்ல. அசல் வழக்கு எண் 100/2017 தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் அசல் வழக்கு எண் 98/2021 படி தீர்ப்பு அளிக்கப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி வாதி வழக்கறிஞர் வேண்டுகோளின் படி ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

ஒம்/– M.மேகலாமைதிலி
கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.